# STATE ELECTION COMMISSION
## PUDUCHERRY

---

**Dated. 30.12.2021**

## PRESS RELEASE

The Local bodies elections are around the corner. In order to update the Electoral Rolls, State Election Commission is giving a chance to all Puducherians those who have attained an age of 18 years as on 01-01-2022 to enroll themselves in the Electoral Rolls for the Civic Bodies elections.

In this connection, this commission has instructed all the Electoral Registration Officers (EROs) viz. The Commissioners of Municipalities and Commune Panchayats to receive applications from eligible Puducherians for correction of entries and inclusion / Deletion of names and matching of Photographs of existing electors in electoral rolls in corresponding Municipal / Panchayat wards. Therefore, eligible Puducherians are requested to file application before the concerned EROs for inclusion / deletion of names or correction of entries including photographs in electoral roll. Electoral Roll already published is readily available in SEC's Website (https://sec.py.gov.in/). Application from eligible Puducherians shall be received by concerned EROs from 01.01.2022 for seven days.

STATE ELECTION COMMISSIONER

**மாநில தேர்தல் ஆணையம்**

3வது தளம், தேர்தல் துறை அலுவலக வளாகம், லாஸ் தோட்டம், வில்லியனூர் மெயின் ரோடு,

ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 605 010. தொலைபேசி : 0413 – 2291118, 2291028

## செய்திக்குறிப்பு

புதுச்சேரி, 30-12-2021

புதுச்சேரியில், உள்ளாட்சி தேர்தல் விரைவில் நடத்தப்பட உள்ளது. எனவே, புதுச்சேரியில் வார்டு வாரியான வாக்காளர் பட்டியலை மேம்படுத்தவும், எதிர்வரும் 01-01-2022 அன்று 18 வயது நிரம்பிய தகுதி வாய்ந்த, புதுச்சேரி மாநில வாக்காளர்கள், தங்களது பெயரை உள்ளாட்சி தேர்தலுக்கான வார்டு வாரியான வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்கு, புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையமானது மீண்டும் ஒரு வாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக, இம்மாநில தேர்தல் ஆணையமானது, அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளின் ஆணையர்களை, தகுதிபெற்ற புதுச்சேரி வாழ் வாக்காளார்கள் தங்களது பெயரை வார்டு வாரியான வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கும் / தேவையானவர்கள் தங்களது பெயரை அப்பட்டியலில் இருந்து நீக்கி கொள்வதற்கும் மற்றும் தற்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாக்காளர்கள் தங்களது புகைப்படத்தினை அந்தந்த நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்கான வாக்காளர் பட்டியலில் சரிபார்த்துக் கொள்வதற்கும் / மாற்றிக்கொள்வதற்கும் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. எனவே, தகுதிபெற்ற புதுச்சேரி மாநில வாக்காளர்கள் அனைவரும் உள்ளாட்சி தேர்தலுக்கான வார்டு வாரியான வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்த்தல் / நீக்குதல் / திருத்தங்கள் செய்தல் மற்றும் புகைப்படங்களை சரிபார்த்தல் தொடர்பான விண்ணப்பங்களை அந்தந்த வாக்காளர் பதிவு அதிகாரியிடம் வரும் 01-01-2022 முதல் 07-01-2022 வரை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உள்ளாட்சி தேர்தலுக்கான வார்டு வாரியான வாக்காளர் பட்டியலானது புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையத்தின் அலுவலக இணையதள முகவரி https://sec.py.gov.in -ல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**(ராய் பி தாமஸ்)**
**மாநில தேர்தல் ஆணையர்**